*பிரசங்கம் 7*

# தேவன் மற்றும் விக்கிரக ஆராதனை

## (1 கொரிந்தியர் 10:14-22)

*சக கிறிஸ்தவர்களுக்கோ அல்லது புறம்பே உள்ளவர்களுக்கோ ஆவிக்குரிய வகையில் தீங்கு எதுவும் செய்யப்படாத வரையில், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்ணுதல் என்பது கொரிந்திய சகோதரர்களுக்கு ஏற்படையதாக இருந்தது என்று அவர்களுக்குப் பவுல் முன்னதாகக் கூறியிருந்தார்.[1] இருப்பினும் 10:14-22ல் கிறிஸ்தவர்கள் கடந்து செல்லக் கூடாததாக இருந்த கோடு ஒன்றை அப்போஸ்தலர் வரைந்தார். அவர்கள் புறதெய்வ வணக்க மத நடவடிக்கைகளில் பங்கேற்கக் கூடாதிருந்தது (10:14-22).*

*இப்படிப்பட்ட ஒரு செய்தியானது இன்றைய நாட்களில், பெருமளவு விக்கிரக ஆராதனைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்துள்ள நமது உலகத்திற்கு மிகவும் பொருத்தமானதாக உள்ளது. வேதாகமத்தின் கர்த்தராகிய தேவனைத் தவிர மற்ற கடவுள்கள், ஆவிகள் அல்லது வல்லமைகளுக்குப் பலர் பயபக்தி செலுத்துகின்றனர்.*

## விக்கிரக ஆராதனை பற்றிய வேதாகமத்தின் போதனை

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலும் விக்கிரக ஆராதனை என்பது தடைசெய்யப்பட்ட ஒரு ஆய்வுக்கருத்தாக உள்ளது. விக்கிரக ஆராதனை பற்றி வேதாகமம் குறிப்பாகக் கூறுவது என்ன?

**விக்கிரக ஆராதனை என்பது தேவனால் சகிக்கக் கூடாததாக உள்ளது**

இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன், "உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" என்று கூறினார் (யாத்திராகமம் 20:2, 3). இது அவரது பத்துக்கட்டளைகளின் முதல் கட்டளையாக இருந்தது. தேவனுடைய மக்கள், வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட நாட்டிற்குள் பிரவேசிப்பதற்குச் சற்று முன்னர், மோசேயின் மூலமாகத் தேவன் பின்வருமாறு கூறினார்:

> உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவருக்கே ஆராதனை செய்து, அவருடைய நாமத்தைக்கொண்டே ஆணையிடுவாயாக. உன் தேவனாகிய கர்த்தருடைய கோபம் உன்மேல் மூண்டு, உன்னைப் பூமியில் வைக்காமல் அழித்துப்போடாதபடிக்கு, உங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களின்

*தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றாதிருப்பீர்களாக. உன் நடுவிலிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறாரே (உபாகமம் 6:13-15).*[2]

விக்கிரக ஆராதனையைத் தடைசெய்தல் என்பது, விக்கிரகங்களை உண்டாக்குதல் மற்றும் அவற்றை ஆராதித்தல் ஆகியவற்றைத் தடை செய்தலை உள்ளடக்கியது. இது பத்துக்கட்டளைகளில் இரண்டாவது கட்டளையாக இருந்தது (யாத்திராகமம் 20:4-6). இஸ்ரவேல் மக்கள், மற்ற தேவர்களின் பெயர்களை முதலாய்க் குறிப்பிடக்கூடாதிருந்தது (யாத்திராகமம் 23:13). மந்திரவாதம் மற்றும் பில்லிசூனியத்தின் பிற வடிவங்களைத் தடைசெய்த ஆணைகளுடன் விக்கிரக ஆராதனையைத் தடை செய்யும் கட்டளை நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது (லேவியராகமம் 19:26ஆ, 31; 20:6; உபாகமம் 18:9-14).[3]

தனிநபர்கள் (யாத்திராகமம் 22:20) மற்றும் மக்களினம் (உபாகமம் 6:14, 15; காண்க 1 இராஜாக்கள் 9:6-9) ஆகிய இரு தரப்பினருக்கும், மரணம் என்பதே விக்கிரக ஆராதனைக்குத் தண்டனையாக இருந்தது. மற்ற தேவர்களை ஆராதிக்கும்படி இஸ்ரவேல் மக்கள் சோதிக்கப்படாதிருக்கும்படி. அவர்கள் நாட்டை வெற்றி கொள்ளும் போது, கானானில் இருந்த மக்களினங்களை அழிக்க வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது (யாத்திராகமம் 23:23, 24). உண்மையில் இஸ்ரவேல் மக்கள், நாட்டில் இருந்த மக்களை முற்றிலுமாகத் துரத்தத் தவறிய காரணத்தால், அவர்கள் விக்கிரக ஆராதனைக்காரர்கள் ஆயினர் மற்றும் அவர்களின் சொந்த நாடு கடைசியில் அழிக்கப்பட்டது (2 இராஜாக்கள் 17:7-18). அவர்களின் சூழ்நிலையை ஒரு எழுத்தாளர் பின்வருமாறு நன்கு விவரித்தார்: "விக்கிரக ஆராதனையை அழித்தல் அல்லது அதினால் அழிக்கப்படுதல் என்பதே வேதவசனத்தின் கருத்தாக இருந்தது."[4]

புதிய ஏற்பாட்டில் நமக்கு, ஒரே "ஒரு தேவன்" தாம் இருக்கிறார் (எபேசியர் 4:6) - அதாவது "உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும் ஒருவரேயன்றி வேறோரு தேவன் இல்லை" (1 கொரிந்தியர் 8:4ஆ) - என்று நினைவூட்டப் பட்டுள்ளது.[5] முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஏவுதல் பெற்ற சுவிசேஷ ஊழியர்கள் "நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, ... ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று" மக்களிடத்தில் வேண்டிக் கேட்டுக்கொண்டனர் (நடபடிகள் 14:15; காண்க 17:22-31). புறஜாதிக் கிறிஸ்தவர்கள் விக்கிரக ஆராதனையில் இருந்து வெளியே வந்திருந்தனர். உதாரணமாக, தெசலோனிக்கேயர்கள், ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு, "விக்கிரகங்களைவிட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பி" இருந்தனர் (1 தெசலோனிக்கேயர் 1:9ஆ; மேலும் காண்க 1 கொரிந்தியர் 12:2). இதன் விளைவாக அவர்கள் விக்கிரக ஆராதனையைக் குறித்து இனி செய்வதற்கு ஒன்றும் கொண்டிருக்கவில்லை என்று கூறப்பட்டனர்; அவர்கள் "விக்கிரகாராதனைக்கு விலகி ஓட" வேண்டியிருந்தனர் (1 கொரிந்தியர் 10:14; மேலும் காண்க 1 யோவான் 5:21; 1 பேதுரு 4:3)[6] மற்றும் அவர்கள் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாதவர்கள் மத்தியில் விக்கிரக ஆராதனைக்காரர்கள் இருந்தனர் என்று எச்சரிக்கப்பட்டனர் (1 கொரிந்தியர் 6:9; காண்க கலாத்தியர் 5:19-21).

சபையில், ஒழுக்கவீனமான மற்றும் பொருளாசையுடைய உறுப்பினர்கள் மற்றும் எதிர்த்து நிற்கும், மதுபானம் பண்ணும் மற்றும் மோசடிக்காரர்களாயிருக்கும் கிறிஸ்தவர்களுடன் (1 கொரிந்தியர் 5:11), விக்கிரக ஆராதனைக்காரர்களும் சபையின் ஒழுங்கு நடவடிக்கைக்குக் கீழாயிருந்தனர். விக்கிரக ஆராதனையில் விடாப்பிடியாக இருப்பவர்களின் - அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அறியப்பட்டிருந்தாலும் இல்லை என்றாலும் அவர்களின் - நிறைவான அடைவிடம் "இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" என்பதாகவே இருக்கும் (வெளிப்படுத்தின விசேஷம் 21:8). தேவனைச் சேவிக்க, அவருக்கு கீழ்ப்படிய மற்றும் நித்தியத்திற்கும் இரட்சிக்கப் பட்டிருக்க விரும்புகிறவர்கள், வேதாகமத்தின் ஒரே தேவனான, வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராக இருக்கும் தேவனைத் தவிர வேறு எந்தக் கடவுளையும் ஒப்புக்கொள்ளவோ அல்லது ஆராதிக்கவோ மறுப்பவர்களாக இருக்க வேண்டும்!

### விக்கிரக ஆராதனை என்பது தேவனை ஆராதிப்பதுடன் ஒத்திசையாததாக உள்ளது

விக்கிரக ஆராதனை என்பது ஆண்டவராகிய தேவனை ஆராதிப்பதுடன் ஒத்திசையாததாக உள்ளது என்று வேதாகமம் போதிக்கிறது. பவுல் "நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய (விக்கிரகங்களினுடைய) போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே" என்று கூறியபோது (1 கொரிந்தியர் 10:21ஆ), இந்தக் கருத்தையே மிகச் சரியாக ஏற்படுத்தினார். தேவனை ஆராதிப்பதாக அறிவித்துக்கொண்டே ஒருவர் மேலும் மற்ற கடவுளை ஆராதிப்பதன் மூலம் அவரை (தேவனை) பிரியப்படுத்த முடியாது என்று அவர் அர்த்தப்படுத்தினார்.[7]

அந்தக் கருத்து வேதாகமரீதியான முதன்மை ஆய்வுக்கருத்தாக உள்ளது. தேவன் எரிச்சல் உள்ள தேவனாக இருக்கிறார் (உபாகமம் 5:9அ); அவர் போட்டியாளர் எவரையும் சகித்துக் கொள்வதில்லை. "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" (யாத்திராகமம் 20:3) என்பது, மற்ற தேவர்களைச் சேவிப்பதற்காக நாம் அவரைப் புறக்கணித்து விடக்கூடாது என்று மாத்திரமல்ல, ஆனால் அவருடன் கூடுதலாக அல்லது அவருடன் சேர்த்து நாம் எந்தக் கடவுள்களையும் கொண்டிருக்கக் கூடாது என்றும் அர்த்தப்படுத்துகிறது.

தேவனுடன் சேர்த்து நாம் வேறு கடவுள்களை ஆராதிப்பதைத் தேவன் அங்கீகரிப்பது இல்லை என்ற உண்மையானது எப்போதுமே தேவனுடைய மக்களால் மறக்கப்படக் கூடியதாக உள்ளது. பழைய ஏற்பாட்டின் காலங்களில் இஸ்ரவேல் மக்கள், கர்த்தருக்குள் தங்கள் விசுவாசத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு அதற்குப் பதிலாக மற்ற கடவுள்களை ஆராதிக்கவில்லை. மாறாக அவர்கள், கர்த்தராகிய தேவனை தாங்கள் ஆராதிப்பதில், மற்ற கடவுள்களையும் கூட்டிக்கொள்ளச் சாய்ந்தனர். எடுத்துக்காட்டாக, "ஆசாரியர்கள் பாகலுக்கும் [ஒரு பொய்த்தேவன்] யாவேக்கும் [கர்த்தராகிய தேவன்] பலிகளைச் செலுத்தினர் மற்றும் தேவாலயத்திலேயே விக்கிரகங்கள் நிலைநாட்டப்பட்டன (2 நாளாகமம் 15:16; எரேமியா 32:34; எசேக்கியேல் 8:5-11)."[8]

இன்றைய நாட்களில், கிறிஸ்தவர்களும்கூட தேவனை வெளிப்படையாகப்

*புறக்கணித்து தங்கள் பற்றுறுதியை மற்ற கடவுள்களிடத்திற்கு மாற்றுதல் என்பது காணப்படாததாக உள்ளது; ஆனால் பலர் அவரை ஆராதிப்பதுடன் கூடுதலாக மற்ற கடவுள்களையும் சேவிக்கின்றனர். கிறிஸ்தவர்கள் தேவனுடன் மம்மோனை (அல்லது பணத்தை) ஆராதிக்கச் சாய்கின்றனர், இது அவரது கட்டளைக்குக் கீழ்ப்படியாமையாக உள்ளது. ஆப்பிரிக்கா கண்டத்தில் பல ஆண்டுகள் ஊழியம் செய்த அனுபவம் கொண்டுள்ள வென்டெல் புரூம் அவர்களின் கூற்றுப்படி, ஆப்பிரிக்காவில் உள்ள சில சபைகள் பொதுவான ஒரு பிரச்சனையைக் கொண்டுள்ளன. ஒரு பேட்டியில் அவர் பின்வருமாறு கூறினார்:*

> *பழைய கடவுள்கள் பாதாள அறைக்குச் சென்றுள்ளனர் என்பதே ஆப்பிரிக்காவில் நடந்துள்ளது, அதன் மூலம் அவர்கள் சபையில் உண்மையுள்ள உறுப்பினர்களாகத் தோற்றம் தருகின்றனர், ஆனால் சுகவீனம் அல்லது பேரழிவு ஏற்படும் காலத்தில், அவர்கள் பழைய தேவர்களிடம் விரைவாகத் திரும்பி விடுகின்றனர். பல கிறிஸ்தவர்கள், (விக்கிரக ஆராதனைக்காரர்கள் ஒன்றுகூடி ஆராதிக்கும்) கிராம "வேண்டுதல் வீடுகளுக்கு" செல்கின்றனர். பல கிறிஸ்தவர்கள் இந்த வேண்டுதல் வீடுகளிலும் உறுப்பினர்களாக இருந்துகொண்டு இந்தவீடுகளில் பலிகளைச் செலுத்துகின்றனர்.*[9]

*ஆப்பிரிக்காவில் நீண்ட காலம் ஊழியராக உள்ள இன்னொரு சகோதரரான ஹென்றி ஹஃபோர்டு அவர்கள் பின்வருமாறு கூறினார்:*

> *பேரிடர் தாக்கினால் கிறிஸ்தவர், அடிப்படைகள் யாவையும் மூடும்படி சோதிக்கப்படுகிறார். தேவனிடத்தில் ஜெபித்தல் வேலை செய்வதில்லை என்று காணப்படுகிறபோது அவர் ஷாமான் (ஜுஜு-ஜுஜு குரு அல்லது வேறு எப்பெயரையும் கொண்டுள்ள) ஒருவரைப் பார்க்கக் கூடும் அல்லது "வேண்டுதல் வீடு" ஒன்றிற்குச் சென்று, தம்மை சபித்தது எது என்று கண்டறிந்து பலிசெலுத்தும் செயலைத் தொடங்கி, உச்சாடனங்களைப் பயன்படுத்தி அல்லது வேறு ஏதாவது செயல் செய்து, அந்த சாபத்தை நீக்க ஆவிகளுடன் செயல்படக்கூடும். கிறிஸ்துவின் சபையில் உறுப்பினர்களாக இருப்பவர்கள், இந்த வழியில் செல்வது தவறு என்று அறிந்துள்ளனர், ஆனால் அவர்கள் பாரம்பரிய வழிகளுக்கு இணங்கிப் போகும்படி குடும்ப உறுப்பினர்களோ அல்லது மனைவி வழி உறவினர்களோ அடிக்கடி அவர்கள் மீது பெரிய அளவில் வலியுறுத்தம் செய்கின்றனர். இதில் நாம் புரிந்துகொள்ளக் கடினமான பயம் என்ற வடிவம் பெரிதும் செயல்படுகிறது ... இஸ்ரவேல் மக்கள் நாட்டின் ஆவிகளையும் யெகோவா தேவனையும் ஆராதித்து வந்தது போன்று, இங்கு விசேஷமாக கிராமிய சூழ்நிலையில் மாபெரும் வகையில் சோதிக்கப்படுதல் உள்ளது. கிறிஸ்தவர்கள் வேண்டுதல் வீடுகளுக்கு அல்லது ஆவிகளைச் சமாதானப்படுத்தும் பாரம்பரிய இடங்களுக்குக் கள்ளத்தனமாகச் செல்கின்றனர்.*[10]

*தேவன் ஒருபகுதியான பற்றுறுதியை ஏற்றுக்கொள்வதில்லை. அவர் எரிச்சல் உள்ள தேவனாக இருக்கிறார் மற்றும் தம்மைப் பின்பற்றுபவர்களை அவர் வேறு எந்தக் கடவுளோடும் பகிர்ந்துகொள்ள மாட்டார். அவரது*

மக்கள் தங்களின் எல்லாவற்றுடனும் அவரை சேவிக்க வேண்டும். தேவனுடைய மக்களுக்கு அவரது வார்த்தைகளை மோசே எடுத்துச் சொல்லுகையில் அவர், "இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் *முழு* இருதயத்தோடும், உன் *முழு* ஆத்துமாவோடும், உன் *முழுப்* பலத்தோடும் அன்புகூருவாயாக" என்று கூறினார் (உபாகமம் 6:4, 5; என்னால் வலியுறுத்தப் படுகிறது).[11] புறதெய்வ வணக்கத்தில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவர்கள், அந்த நடைமுறைகள் கிறிஸ்தவத்துடன் இணக்கமாக இருப்பதில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்! கிறிஸ்தவராக இருக்க விரும்பும் எவரொருவரும், விக்கிரக ஆராதனை நடைமுறைகளுடன் உள்ள தமது முந்திய தொடர்புகள் யாவற்றையும் முற்றிலுமாகத் துறக்க வேண்டும்.

**விக்கிரகங்கள் தேவனுடன் ஒப்பிட இயலாதவைகளாக உள்ளன**

விக்கிரகங்கள் தேவனுடன் ஒப்பிடப்பட முடியாதவைகளாக உள்ளன என்று வேதாகமம் போதிக்கிறது. விக்கிரகங்கள் ஆராதிக்கத் தகுதியானவை அல்ல என்பதை இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள் காண்பித்தனர். அதுபோன்றே பவுல், அவைகள் உண்மையில் ''ஒரு பொருளல்ல'' என்று கூறினார் (1 கொரிந்தியர் 10:19): அவைகள் உண்மையான இருப்பையும் உயிரையும் கொண்டிருப்பதில்லை; அவைகள் வல்லமையற்றவைகளாக உள்ளன.

உண்மையான ஒரே தேவனுக்கும் விக்கிரகங்களுக்கும் இடையிலான நேரெதிர் ஒப்பீடு, கர்மேல் மலையில் எலியாவுக்கும் பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கும் இடையில் நடந்த போட்டியில் தெளிவாக விவரிக்கப் பட்டது. பாகாலின் தீர்க்கதரிசிகள் பலமணி நேரமாகத் தங்கள் கடவுளைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தனர், அவர்கள் உரக்கச் சத்தமிட்டு, பலிபீடத்தைச் சுற்றிக் குதித்துக் கொண்டிருந்தனர், மற்றும் தங்கள் தேவனுடைய கவனத்தைப் பெறுவதற்காகத் தங்களைக் கீறிக்கொண்டிருந்தனர் - ஆனால் பதில் எதுவும் வராதிருந்தது. "ஒரு சத்தமும் பிறக்கவில்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை" (1 இராஜாக்கள் 18:26-29). இதற்கு நேர்மாறாக, எலியாவின் ஜெபம் ஏறெடுக்கப்பட்ட உடனே, கர்த்தர் வல்லமை நிறைந்த வகையில் பதில் அளித்தார் (1 இராஜாக்கள் 18:36-38). பாகாலின் வல்லமையின்மைக்கும் தேவனுடைய வல்லமைக்கும் இது என்ன ஒரு செயல்விளக்கமாக உள்ளது! மக்கள் "கர்த்தரே தெய்வம்" "கர்த்தரே தெய்வம்" என்று கதறினர் (1 இராஜாக்கள் 18:39). தேவன் உயிருள்ளவராக இருக்கிறார்; அவரால் கேட்க முடியும் மற்றும் அவர் வல்லமை நிறைந்தவராக இருக்கிறார். பொய்த்தேவர்கள் கேட்க முடியாது அல்லது பதில் அளிக்க முடியாது ஏனெனில் அவைகள் வல்லமை கொண்டிருப்பது இல்லை. அவைகள் உண்மையான இருப்பைக் கொண்டிருப்பதில்லை.

வேதாகம எழுத்தாளர்கள் இந்த முடிவுடன் ஒத்துப்போகின்றனர். விக்கிரகங்கள் ''பொய்யே, அவைகளில் சுவாசம் இல்லை ...,'' ''அழியும்'' (எரேமியா 51:17, 18; காண்க 10:14, 15); அவைகள் "ஜீவனில்லாதவைகள்" (சங்கீதம் 106:28); அவைகள் தங்கள் சொந்த மக்களை விடுவிக்க இயலாதவைகள் (2 நாளாகமம் 25:15; மேலும் காண்க எரேமியா 11:12ஆ); அவைகளால் பேசவோ, காணவோ, கேட்கவோ, நுகரவோ, உணரவோ, நடக்கவோ அல்லது ஒலியை ஏற்படுத்தவோ முடியாது (சங்கீதம்

*115:4-8). உண்மையில் அவைகள் தீமையோ அல்லது நன்மையோ செய்ய முடியாது (எரேமியா 10:5).*

*மனிதன் உட்பட எல்லாவற்றையும் தேவன் உண்டாக்கினார் (ஆதியாகமம் 1), ஆனால் விக்கிரகங்கள் மனிதனால் உண்டாக்கப்பட்டன என்பது, தேவனுக்கும் விக்கிரகங்களுக்கும் இடையில் உள்ள மாபெரும் வேறுபாடாக உள்ளது. இந்த வேறுபாட்டை வலியுறுத்திய ஏசாயா, ஒரு விக்கிரகத்தை உண்டாக்குவதற்குத் தொழிலாளிகள் செய்யும் வேலையை விபரமாக விவரித்தார். பின்பு அந்த விக்கிரகத்தை உண்டாக்கியவர், தாமே உண்டாக்கிய அதற்கு முன்னால் பணிந்து வணங்கி அதை ஆராதிக்கிறார் என்பது முரண்பாடானதாக உள்ளது! (காண்க ஏசாயா 44:9-20; மேலும் காண்க 40:19, 20; எரேமியா 10:1-16; ஆபகூக் 2:18-20.)*

*விக்கிரகத்தை ஆராதித்தல் தவறானதாக இருப்பது மட்டுமின்றி, அது மூடத்தனமானதாகவும் உள்ளது. மரத்தால் அல்லது கல்லால் ஆன விக்கிரகங்களைப் பணிந்துகொள்ளும் அல்லது ஆவிகளின் அல்லது முன்னோர்களின் உதவியை நாடும் மக்கள் அறைகூவல் விடுக்கப்பட வேண்டும். அவர்களிடத்தில் நாம், "உங்கள் கடவுள் உங்களுக்கு உதவக்கூடும் என்று உண்மையிலேயே நீங்கள் நினைக்கிறீர்களா? உங்கள் கடவுள் உங்களை உண்மையிலேயே நலமாக்க முடியுமா? உண்மையில் அது எதையாவது செய்ய முடியுமா?'' என்று கேட்கலாம். வானத்தையும் பூமியையும் படைத்த, நித்தியத்திற்கும் ஜீவனுள்ளவரான மற்றும் மனித குலத்திற்கு உதவி செய்கிற தேவனைப் பற்றி அவர்கள் கற்றறிவது அவசியமாக உள்ளது.*

*விக்கிரக ஆராதனை பற்றிய ரீதியான போதனைகளின் வெளிச்சத்தில், அதற்குக் கிறிஸ்தவர் எவ்வாறு மறுசெயல் செய்ய வேண்டும்? கிறிஸ்து விக்கிரக ஆராதனைக்கு எதிரானவராக இருப்பதால், கிறிஸ்தவர்களும் அதற்கு எதிரானவர்களாக இருக்க வேண்டும். தீர்க்கதரிசிகளைப் போல, கிறிஸ்தவர்களும் விக்கிரக ஆராதனைக்கு எதிரான ஒரு யுத்தத்தில் ஈடுபட வேண்டும். விக்கிரக ஆராதனை நடத்தையைச் சகித்துக் கொள்வதற்குப் பதிலாக நாம், நீதியுள்ள நடத்தையின் எல்லைக்குள் - சபைக்குள் - விக்கிரக ஆராதனையின் செல்வாக்கை மிதித்துப் போடுவதற்கு நம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.[12] பழங்காலங்களில் தேவனுடைய மக்கள் விக்கிரக ஆராதனையின் காரணமாக அழிக்கப்பட்டனர். இன்றைய நாட்களில் விக்கிரக ஆராதனைக்கு சபையின் பதில்செயலானது அது (சபை) உயிருடன் இருக்கிறதா அல்லது மரித்து இருக்கிறதா என்பதைத் தீர்மானிப்பதாக இருக்கலாம். புரூம் அவர்களின் கூற்றுப்படி, "பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மக்களுக்கு விக்கிரக ஆராதனை என்பது சாவுக்கேதுவான பிரச்சனையாக இருந்தது மற்றும் இன்றைய நாட்களில் ஆப்பிரிக்க நாட்டில் உள்ள சபைகளுக்கும் அது அவ்வாறே இருக்க முடியும்."[13]*

## விக்கிரகங்களை விட்டு உண்மையான தேவனிடத்திற்குத் திரும்புதல்

*மற்ற கடவுள்களை ஆராதிப்பதில் தங்கள் வாழ்வைச் செலவிட்டு இருப்பவர்களுக்கு, கிறிஸ்துவின் அழைப்பு விரிவாக்கப் பட்டுள்ளது. முதல் நூற்றாண்டில் தெசலோனிக்கேயில் இருந்தவர்கள், விக்கிரகங்களை*

விட்டுத் தேவனிடத்திற்குத் திரும்பியது போன்றே ஒவ்வொரு யுகத்திலும் விக்கிரக ஆராதனைக்காரர்கள் தேவனிடத்தில் திரும்பியுள்ளனர் (1 தெசலோனிக்கேயர் 1:9). விக்கிரக ஆராதனைக்காரர்கள் கிறிஸ்துவினிடத்தில் திரும்ப வேண்டியது ஏன்?

**தேவனுடைய இயல்பு**

தேவனுடைய இயல்பு என்பது, பொய்த்தேவர்களை விட்டு உண்மையான ஆண்டவரிடத்திற்கு திரும்ப வேண்டியதற்கான ஒரு காரணமாக உள்ளது. கிறிஸ்தவர்கள் ஆராதிக்கும் தேவன், விக்கிரக ஆராதனைக்காரர்களால் ஆராதிக்கப்படும் தேவர்களைக் காட்டிலும் மிகவும் மேன்மையானவராக இருக்கிறார். இந்தத் தேவர்கள் ஏறுமாறானவர்களாகவும் நம்பகமற்றவர்களாகவும் இருக்கின்றனர் என்று மிகச்சிறப்பாக விவரிக்கப்படுகின்றனர். அவர்களின் நடவடிக்கைகள் மனித குலத்திற்கு தீங்கு விளைவிப்பதாகவும் வேண்டு மென்றே துன்பம் இழைப்பதாகவும் உள்ளன என்று சித்தரிக்கப் பட்டுள்ளது மிகமோசமானதாகும். இவைகள் மனிதர்களுக்குச் செய்யும் பொல்லாங்கு, விசேஷ பலிசெலுத்துதல் மற்றும் சடங்காச்சாரங்கள் ஆகியவற்றைக் கொண்டு தடுத்து நிறுத்தப்படுவதாக யூகிக்கப்படுகிறது. உண்மையில் இவைகள் வல்லமையற்றவைகளாக இருக்கின்றன. இவைகளை நம்புபவர்களுக்கு உண்மையில் இவைகள் உதவி செய்யவோ அல்லது தீங்கு இழைக்கவோ இயலாது.

இதற்கு நேர்மாறாக, தேவனுடைய இயல்பை நாம் ஆழ்ந்து சிந்திப்போமாக:

- *அவர் நித்தியமானவராகவும் என்றைக்கும் மாறாதவராகவும் இருக்கிறார்* (சங்கீதம் 102:25-27). அவர் சீர்பொருத்தமானவராகவும் சார்ந்திருக்கத் தகுதியானவராகவும் இருக்கிறார். "தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்" (1 கொரிந்தியர் 10:13).
- *அவர் சர்வ வல்லமை நிறைந்தவராக இருக்கிறார்* (எரேமியா 32:17; எபேசியர் 3:20). அவர் இந்த உலகத்தையும் இதில் உள்ள எல்லாவற்றையும் படைத்தவராக இருக்கிறார் (நடபடிகள் 14:15).
- *அவர் கருணையுள்ளவராக இருக்கிறார்*. இதை நாம் எவ்வாறு அறிகிறோம்? வேதாகமம் அவ்வாறு நமக்குக் கூறுகிறது. "தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1 யோவான் 4:8). உண்மையான ஒரே தேவனுடைய உபகாரத்தன்மையுள்ள இயல்பிற்கு இந்த வார்த்தையே சாட்சியைக் கொண்டுள்ளது (நடபடிகள் 14:17).
- *அவர் எப்போதும் கிடைக்கக் கூடியவராக இருக்கிறார்* (நடபடிகள் 17:27, 28). தேவன் கட்டளையிட்டுள்ளபடி நாம் அவரை அணுகினால், விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதைப் பற்றி நாம் ஒருக்காலும் கவலைப்படத் தேவையிருக்காது. தேவன் இருக்கிறார், அவர் கேட்கிறார் மற்றும் அவர் தமது வார்த்தையின்படியும் தமது சித்தத்தின்படியும் சீர்பொருத்தமாக செயல்படுகிறார், நம்மைக் குறித்து அவரது செயல்பாடுகள் எப்போதுமே அன்பின் அடிப்படையில் அமைந்துள்ளன.

### கிறிஸ்துவின் நபர்த்துவம்

*விக்கிரக ஆராதனையைக் கைவிட்டு தேவனிடத்தில் திரும்புவதற்கான இன்னொரு காரணம், இயேசு கிறிஸ்துவின் நபர்த்துவத்தில் காணப்படுகிறது. இந்த அண்டத்தை உண்டாக்கிய தேவன் தமது குமாரனை அனுப்பியதன் மூலம் தம்மைப் பற்றி அறியச் செய்துள்ளார் என்பதால், அவரைப் பற்றி கிறிஸ்தவர்கள் அறிகின்றனர். மாம்சத்தில் தேவனாக இயேசு வந்தார் (யோவான் 1:1, 14; 14:9; காண்க மத்தேயு 1:23). அவர் பாவமற்ற வாழ்வு ஒன்றை நடத்தி தமது அற்புதங்களில் தமது வல்லமையை வெளிப்படுத்தினார். அவர் தமது ஞானம் மற்றும் அறிவு ஆகியவற்றின் மூலம் பிதாவைப் பிரதிபலித்தார் மற்றும் அவர் தமது அன்பு மற்றும் இரக்கம் மற்றும் பரிவிரக்கம் ஆகியவற்றை ஒவ்வொருவருக்கும் செயல்விளக்கப் படுத்தினார். மக்கள் இரட்சிக்கப்படும்படிக்கு அவர், சிலுவையில் மரிக்கும் அளவுக்குக் கூடப் பாடுபட மனவிருப்பம் கொண்டிருந்தார். அவரது உயிர்த்தெழுதல் அவரது தெய்வீகத்தை நிரூபித்தது, மற்றும் அவர் இந்த உலகத்தை நியாயந்தீர்க்க மறுபடியும் திரும்பிவரும் தமது இரண்டாம் வருகையையும் வாக்களித்தார். வேறு எந்த மத அமைப்பிலும், மனிதக்குலத்தின் மீட்பராக இயேசுவைப் போன்று நெடுங்காலத் தொடர்புடைய எந்த விஷயமும் இருப்பதில்லை. இப்படிப்பட்ட ஒரு நபரை ஒவ்வொருவரும் பின்பற்ற விரும்புவார் என்பது நிச்சயம்!*

### கிறிஸ்தவத்தின் ஆசீர்வாதங்கள்

*விக்கிரக ஆராதனைக்குரிய கடவுள்களைக் கைவிட்டுவிட்டு இயேசுவைப் பற்றிய சுவிசேஷச் செய்திக்குக் கீழ்ப்படிய வேண்டியதற்கான மூன்றாவது காரணம், கிறிஸ்தவராக இருப்பதன் ஆசீர்வாதங்களுடன் தொடர்புடையதாக உள்ளது.*

*<u>பரிசுத்தம் உத்தரவாதப் படுத்தப்பட்டுள்ளது.</u> நாம் ஒரு பரிசுத்த வாழ்வை வாழும்படி கிறிஸ்து நம்மை அழைத்துள்ள காரணத்தினால் நாம் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறோம். கிறிஸ்தவராகும் ஒருவர் அநீதியான வாழ்வைத் தொடர்ந்து வாழ முடியாது. தேவன் பரிசுத்தராக இருப்பது போன்றே அவரது மக்களும் பரிசுத்தவான்களாக இருக்க வேண்டும் என்பதற்காகவே அவர் தமது மக்களை அழைக்கிறார் (1 பேதுரு 1:15). கிறிஸ்தவர் புதிதாகப் பிறந்துள்ளார் (யோவான் 3:3, 5; 1 பேதுரு 1:22, 23) மற்றும் அவர் ஒரு புதிய ஜீவனை அனுபவிக்கிறார் (ரோமர் 6:3, 4). அவர் பழைய பாவ மனிதனைப் புறம்பே தள்ளிவிட்டு பரிசுத்தத்தில் நடக்கத் தொடங்குகிறார் (ரோமர் 6:11-13). பழைய வழிகள் இனியும் பொருத்தமானவையாக இருப்பதில்லை.*

*பரிசுத்தத்திற்கான இந்த அழைத்தல், விக்கிரக ஆராதனைக்கார மார்க்கங்களில் அறியப்படாததாக உள்ளது. பொய்த்தேவர்களும் ஆவிகளும் தாங்களே நீதியுள்ளவைகளாக காணப்படுவதில்லை, அவைகள் நீதியுள்ள நடத்தையை வேண்டுவதும் இல்லை. உண்மையில், படைத்தவரை புறக்கணித்துவிட்டு படைக்கப்பட்டவற்றை ஆராதித்தல் என்பது மாபெரும் மற்றும் மாபெரும் பாவம் நிறைந்த தன்மையை விளைவிக்கிறது (ரோமர் 1:18-32). மக்கள் உயர்வான தர அளவையில் வாழ வேண்டும் என்று கிறிஸ்தவம் கேட்டுக்கொள்ளுவதால், அது ஒருவரின் வாழ்வில் கூடுதல் சுமையைச் சுமக்கிறது - அதாவது கிறிஸ்தவமானது ஒரு நபரின் தனிப்பட்ட*

சந்தோஷத்தைக் கூட்டுவதற்கு மாறாக குறைக்கவே செய்கிறது - என்று சிலர் நினைக்கலாம். இதற்கு நேர்மாறாக, பாவம் நிறைந்த வாழ்வை வாழுதல் என்பது துன்பத்தையும் மரணத்தையும் கொண்டுவருகிறது என்பதை, ஆயிரக் கணக்கானவர்களின் வாழ்வு செயல்விளக்கப் படுத்தியுள்ளது (ரோமர் 6:23), அதே வேளையில் தூய வாழ்வை வாழுதல் என்பது எல்லாவற்றிலும் மிகுந்த சந்தோஷமான மிகவும் பூரணப்பட்ட வாழ்வாக உள்ளது[14] (யோவான் 10:10). நீதியுடன் வாழ நாடும் கிறிஸ்தவர் "எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கிறார்" (1 தெசலோனிக்கேயர் 5:16).

*பயம் ஒழிக்கப்படுகிறது.* கிறிஸ்தவர்களாகிய நமது வாழ்வில் இருந்து பயத்தைக் கிறிஸ்து ஒழிக்கிறார் என்பதால் நாம் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறோம் (யோவான் 14:27; 1 யோவான் 4:18). பொய்த்தேவர்களுக்குப் பயப்பட நாம் எந்தக் காரணத்தையும் கொண்டிருக்கவில்லை, அப்படி ஒன்று நிலைத்திருக்கவில்லை என்று அறிந்திருக்கிறோம் மற்றும் கிறிஸ்து இந்த அண்டத்தில் நிலவக்கூடிய எந்த ஆவியைக் காட்டிலும் அதிகம் வல்லமை நிறைந்தவராக இருக்கிறார். நாம் மனிதர்களைக் குறித்தோ (எபிரெயர் 13:6) அல்லது இந்த உலகத்தில் உள்ள வேறு எதைக்குறித்தோ (ரோமர் 8:35-39) பயப்பட தேவையில்லை, மற்றும் நாம் மரணத்தைப் பற்றியஅச்சம் கொண்டிருப்பதில்லை (பிலிப்பியர் 1:21; 1 கொரிந்தியர் 15:54-57). உண்மையில் நாம் "தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டால்" (பிரசங்கி 12:13), நாம் வேறு எதைக்குறித்தும் பயப்படத் தேவையில்லை.

*மன்னிப்பு பெறப்படுகிறது.* நாம் கிறிஸ்தவராகும்போது நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்பதால் நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம். என்றென்றைக்கும் நாம் இயேசுவுடன் இருக்கும்படி இல்லம் செல்லுதலை நாம் முன்னெதிர் நோக்க முடியும்; ஒவ்வொருவரும் பாவியாக இருக்கிறார்; சிலவேளைகளில் நாம் யாவரும் தவறு செய்கிறோம். ஒருநாளில் இயேசு திரும்ப வந்து நாம் இந்த மாம்சத்தில் செய்துள்ள யாவற்றிற்கும் கணக்கு ஒப்புவிக்கும்படி நம்மை அழைப்பார். நமது பாவங்கள் மன்னிக்கப் படாதிருந்தால், நாம் நரகத்திற்குச் செல்லும்படி ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவோம். இருப்பினும் நியாயத்தீர்ப்பின் நாளில் நமது பாவங்களின் காரணமாக நாம் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, நமது பாவங்கள் மன்னிக்கப்பட முடியும், அவைகள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட முடியும்.

அது எவ்வாறு நடக்கக் கூடும்? அது தேவனுடைய கிருபையின் மூலமாகவும் (எபேசியர் 2:8, 9) கிறிஸ்து சிந்திய இரத்தத்தின் வல்லமையின் மூலமாகவும் (எபேசியர் 1:7) நடைபெறுகிறது. கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து (யோவான் 8:24); நமது பாவங்களில் இருந்து மனந்திரும்பி (லூக்கா 13:3; நடபடிகள் 17:30); நமது விசுவாசத்தை அறிக்கையிட்டு (ரோமர் 10:10; மத்தேயு 10:32) மற்றும் பாவமன்னிப்பிற்காக கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்று (நடபடிகள் 2:38; 22:16), விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் நாம் கிறிஸ்துவினிடம் திரும்பும்போது இது நடைபெறுகிறது.

இதைச் செய்யுங்கள், உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும். பின்பு நீங்கள் ஒரு கிறிஸ்தவ வாழ்வை வாழும் சிலாக்கியம் கொண்டிருப்பீர்கள். நீங்கள் விசுவாசத்துடன் இருக்கப் பிரயாசப்படும் வரையிலும் இயேசுவின் இரத்தம் உங்கள் பாவங்களில் இருந்து உங்களைத் தொடர்ந்து சுத்திகரிக்கும்

*(1 யோவான் 1:7). நீங்கள் பயமின்றியும் பரலோகத்தின் நம்பிக்கையுடனும் வாழ முடியும்! இந்த உரிமை கோருதலை விக்கிரகங்கள் - அவைகள் உருவங்களாக அல்லது ஆவிகளாக அல்லது முன்னோர்களாக இருக்கலாம் - ஏற்படுத்த முடியாது!*

## முடிவுரை

நாம் மரத்தினால் அல்லது கல்லினால் செய்யப்பட்ட விக்கிரகங்களை ஆராதிப்பதில்லை அல்லது நமது முன்னோர்களுக்கு மேலான வணக்கம் செலுத்தவில்லை அல்லது ஆவிகளுக்குக் கொடைகள் அளிப்பதில்லை என்பதால், நாம் விக்கிரக ஆராதனையினால் குற்றப்பட்டிருப்பது இல்லை என்று நாம் நினைக்கலாம். இருப்பினும் நாம், தேவனுக்கு முன்பாக வேறு எதையாவது முக்கியமானதாக வைத்தால், அது நமது கடவுளாகி விடுகிறது.

---

குறிப்புகள்

*[1]விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்பதற்குக் கிறிஸ்தவர்களை அனுமதித்த கொள்கை, மத ஊழியங்கள் உள்ளடங்காத வரையில் மற்றும் எவரொருவரும் - கிறிஸ்தவர்கள் அல்லது புறம்பே உள்ளவர்கள் - ஆவிக்குரிய வகையில் தீங்கிழைக்கப்படாத வரையில், விக்கிரக ஆராதனையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் பங்கேற்க நம்மையும் அனுமதிக்கிறது. இந்தக் கொள்கை, மாதங்கள் மற்றும் வாரத்தின் நாட்கள் ஆகியவற்றின் பெயர்களில் பல, புறதெய்வ வணக்கக் கடவுள்களின் பெயர்களைக் கொண்டு தோன்றியிருந்தாலும், அவற்றைப் பயன்படுத்தக் கிறிஸ்தவர்களை அனுமதிக்கிறது. மற்றும் இது விக்கிரக ஆராதனை நம்பிக்கைகளில் முதலாவதாக வேரூன்றியிருந்த ஆனால் மற்ற கடவுள்கள் மற்றும் ஆவிகளுடன் உள்ள தொடர்பு நீண்ட நாட்களுக்கு முன்பே மறக்கப் பட்டதாக உள்ள (விடுமுறைகளைக் கொண்டாடுதல் போன்ற) பொதுவான பல வழக்கங்களில் ஈடுபடுதலைக் கிறிஸ்தவர்களுக்கு அனுமதிக்கிறது. [2]இவ்வசனப் பகுதி, மத்தேயு 4:10ல் இயேசுவினால் மேற்கோள் காண்பிக்கப்பட்டது (மேலும் காண்க - யாத்திராகமம் 23:24அ). விக்கிரகங்களை உண்டாக்குதல் அல்லது அவற்றை ஆராதித்தல் ஆகியவற்றைத் தடை செய்யும் மற்ற பிரமாணங்களுக்கு, பின்வரும் வசனப் பகுதிகளைக் காணவும்: யாத்திராகமம் 34:17; லேவியராகமம் 19:4; 26:1; உபாகமம் 4:15-19, 25, 26; 11:16, 17, 28; 16:21, 22; 27:15; 30:17, 18. [3]மந்திரவாதத்தைச் செயல்படுத்தியவர்கள் அல்லது கள்ளத்தீர்க்கதரிசனம் கொடுத்தவர்கள் மரணத்திற்கு உட்படுத்தப்பட்டனர் (யாத்திராகமம் 22:18; லேவியராகமம் 20:27; உபாகமம் 13:5).* [4]Robert D. Spender, "Idol, Idolatry," in *Baker's Theological Dictionary of the Bible,* ed. Walter A. Elwell (Grand Rapids, Mich.: Baker Books, 2000), 364. *[5]"வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம்" என்று பவுல் விளக்கப்படுத்தச் சென்றார் (1 கொரிந்தியர் 8:5, 6அ). "விக்கிரகமானது ஒன்றுமில்லை" என்று கூறியதில் அவர், விக்கிரகங்கள் உயிருள்ளவை அல்ல என்று தெளிவாக அர்த்தப் படுத்தினார். தேவனைப் போன்று அவைகள் ஜீவனுள்ளவையாக இருப்பதில்லை. [6]தேவனை மாத்திரம் ஆராதிக்க வேண்டும் என்பதை இயேசு உறுதிப்படுத்திய இடமான மத்தேயு*

*4:10ஐயும் காணவும்.* [7]*"தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது" என்ற இயேசுவின் கருத்தை (மத்தேயு 6:24) ஒப்பிட்டுப் பார்க்கவும்.* [8]Spender, *364. தேவாலயத்தில் பொய்த்தேவர்களுக்குப் பலிபீடங்கள் கட்டப்பட்டது குறித்து, 2 இராஜாக்கள் 21:3-5ஐயும் காணவும். இஸ்ரவேல் மக்கள் கர்த்தரை சேவிப்பதாக வெளிவேடம் இட்டுக்கொண்டு இருந்த அதே வேளையில் விக்கிரக ஆராதனை நடவடிக்கைகளுக்கும் தங்களை ஒப்புக்கொடுத்திருந்த நிகழ்வு பல வசனங்களில் சுட்டிக்காண்பிக்கப் பட்டுள்ளது. (எடுத்துக்காட்டாக, ஏசாயா 57:6; 65:11; எரேமியா 7:17, 18; 19:13; 32:29; 44:17, 19, 25; எசேக்கியேல் 20:28-31 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும்.)* [9]Wendell Broom, interview by Coy Roper in Abilene, Texas, 26 April 2006. *இந்தக் கிறிஸ்தவர்களில் சிலர், கிறிஸ்தவமே உண்மையான மார்க்கமாக உள்ளது என்று தாங்கள் நம்புவதாக உரிமைகோருகின்றனர் - ஆனால் முன்னோர்களின் கடவுள்கள் மற்றும் ஆவிகள் உண்மையான வல்லமை கொண்டுள்ளன என்ற விஷயத்தில் அவர்கள் தேவனுக்குச் செலுத்துவது போன்றே அவற்றிற்கும் கவனம் செலுத்தத் தொடருகின்றனர்.* [10]Henry Huffard, personal e-mail to Coy Roper, 6 March 2006.

[11]*மத்தேயு 6:24; 12:30; 22:37 ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கவும்.* [12]*"கர்மேல் மலையின்மீது விக்கிரகங்களுக்கு எதிராக எலியா போராடியது போன்றே சபைக்குள்ளும் போராடினர். தேவனுடைய தீர்க்கதரிசிகள் விக்கிரகங்களுக்கு சகிப்புத்தன்மை கொண்டிருந்ததில்லை" என்பதால், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனப் புத்தகங்களில் இருந்து அதிகம் போதித்தல் என்பது, சபைக்குள் விக்கிரக ஆராதனை என்ற பிரச்சனைக்கு ஒரு தீர்வாக இருக்கும் என்று* Broom *அவர்கள் கூறினார்.* [13]Ibid. [14]*எடுத்துக்காட்டாக, ஒருக்காலும் விபசாரம் செய்யாமல் ஒருவர் தமது கணவருக்கு அல்லது மனைவிக்குத் தம்மை முழுமையாகக் கொடுத்தல் என்பது, ஒழுக்கவீனமான வாழ்வு நடையைக் காட்டிலும் அதிகம் முழுமைப் படுவதாக உள்ளது.*